සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
කාන්තා, ළමා කටයුතු හා සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
மகளீர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
**Ministry of Women, Child Affairs and Social Empowerment**

මගේ අංකය
**எனது இல** DSD/HO/04/PM/04/E-Power
My No

ඔබේ අංකය
**உமது இல** ..............................
Your No

දිනය
**திகதி** 2024.02.08
Date

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் :- 2024/02**

சகல மாவட்ட செயலாளர்கள் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்
மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள் பிரதி / மற்றும் உதவி பணிப்பாளர்கள்
பிரதேச செயலாளர்கள்

**“நலன்புரி தேசத்திலிருந்து தொழில் முயற்சியாண்மை தேசம் ஒன்றினை நோக்கி பயணிக்கின்ற மக்கள் சமூகம் ஒன்றை உருவாக்குதல்”**

**“அஸ்வெசும” நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் பயனாளி குடும்பங்களை வலுவூட்டச் செய்யும் வேலை திட்டம் 2024**

**01. அறிமுகம்**

இலங்கையின் வறுமை நிலையினை குறைக்கும் பொருட்டு பல நலன்புரி வேலை திட்டங்கள் காலத்துக்குக்காலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது இந்த நலன்புரி வேலைத்திட்டங்களில் சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டமானது விரிவான வலையமைப்பொன்றும் மூவகை அபிவிருத்தி அணுகு முறையுடன் 29 வருட காலங்களுக்கு அண்மியதாக நாடுமுழுவதும் உள்ளடங்குகின்ற பிரகாரம் செயற்பட்டது.

சமுர்த்தி வேலை திட்டத்தின் கீழ் வறுமை நிலை மற்றும் வசதி வாய்ப்புகள் அற்ற நிலையில் வாழுகின்ற மக்கள் முகம் கொடுக்கின்ற பொருளாதார சமூக, சட்ட, உளவியல் போன்ற பலதரப்பட்ட சிக்கல்களை சரியாக இனங்கண்டு அவற்றினை குறைக்கச்செய்து பொருளாதார, சமூக, சட்ட, மற்றும் உளரீதியான மேம்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக வருமானமீட்டல் வேலைத்திட்டங்கள் உட்பட பல வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2023 ஆம் ஆண்டிலிருந்து புதிய நலன்புரி நன்மைகள்திட்டம் ஒன்றினை தயாரித்து நடைமுறைப்படுத்தும் பொறுப்பு நலன்புரி நன்மைகள் சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சமூகத்தில் 4 வகைத்தொகுதியின் கீழ் நாடுபூராகவும் இனங்காணப்பட்ட 20 இலட்சம் குடும்பங்களுக்குக் அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டம் என்ற பெயரில் புதிய வேலைத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் 2024 ஆம் ஆண்டிலிருந்து அஸ்வெசும நலன்புரி நன்மைகளை பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையினை 24 லட்சம் வரை அதிகரிப்பதற்கு தற்போது அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் பயன்களை பெறுகின்ற நான்கு வகையான சமூக குழுவினருக்கு சொந்தமான குடும்பங்களிலிருந்து வறிய மற்றும் மிகவறிய சமூக குழுக்களுக்குச் சொந்தமான குடும்பங்கள் முன்வரும் மூன்று ஆண்டுகளில் வலுவூட்டல் செய்யப்பட்டு நிவாரணம் பெரும் மனநிலையில் இருந்து மீட்டுக்கொள்வதற்குரிய பொறுப்பு சமுர்த்தி திணைக்களத்துக்கு ஒப்படைத்து பொருளாதார நிலைப்பாடு, நிதி மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான கௌரவ ஜனாதிபதி அவர்களால் 2023.04.17 ஆம் திகதி மற்றும் 2023.09.25 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட அமப/23/0730/604/178 ஆகிய இலக்கங்களைக் கொண்ட அமைச்சரவை நிருபத்தின் மூலம் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் NP/PP/SOC/EMP/2023/2 என்ற இலக்கத்தினுடைய 2023.10.24 மற்றும் 2024.01.05 திகதிகள் இடப்பட்ட கடிதங்கள் மற்றும் NP/SOC/CM/COM/2024 என்ற இலக்கத்தினையும் 2024/02/02ம் திகதியிடப்பட்ட கடித்தின் மூலம் மிகவறிய மற்றும். வறிய சமூகக் குழுக்களுக்கு மேலதிகமாக தற்காலிகமாக நெருக்கடிக்குள்ளான, பாதிப்புக்குள்ளான பயனாளிக் குடும்பங்களை

**1වන අදියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල. /1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல /1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන) / மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்) / Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී / பிரதான கணக்காளர் / Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය) / பணிப்பாளர் (குறு நிதி ) / Director ( Micro Finance) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|---|
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

வலுவூட்டும் வேலைத்திட்டத்தில் உட்படுத்திக் கொள்ள முன்வைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தற்போது அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் நன்மைகளை பெறுகின்ற பயனாளிகளிலிருந்து 2024 ஆம் ஆண்டில் 300,000 குடும்ப அலகுகளை வலுவூட்டச் செய்வதற்கு தெரிவு செய்து கொள்வதும், தெரிவுசெய்து கொள்ளப்பட்ட குடும்பங்களுக்கு குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரிப்பதற்கு ஆயத்தமாகுவதும், பயனாளிகளின் தேவைப்பாடுகள் மற்றும் அவர்களுக்கு வழங்க வேண்டிய சேவைகளை இணங்காண்பது போன்ற விடயங்கள் தொடர்பிலான ஆலோசனைகளும் வழிகாட்டல்களும் இச்சுற்றறிக்கை ஆலோசனை மூலம் வெளியிடப்படுவதான வினையமுடன் அறியத் தருகின்றேன்.

**02 நோக்கங்கள்**

**1. முக்கிய நோக்கம்**

அஸ்வெசம நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெருகின்ற 04 சமூக குழுக்களுக்குச் சொந்தமான குடும்ப அலகுகளின் பிரதான குடியிருப்பாளர் உட்பட ஏனைய அங்கத்தவர்களுக்கு உள, பொருளாதாரம் சமூக பிரதான துறைகள் உட்பட அதனோடு இணைந்ததாக கல்வி சுற்றாடல் மற்றும் சட்டம் ஆகிய உரிய துறைகளில் இருந்து முழுமையாக வலுவூட்டம் செய்து அவர்களை 03 வருட காலத்திற்குள் வலுவூட்டுவது பிரதான குறிக்கோளாக அமைந்துள்ளது.

**2. விசேட நோக்கங்கள்**

I. வறிய மற்றும் மிக வறிய சமூக குழுக்களுக்குச் சொந்தமான குடும்ப அலகுகளை தங்கி வாழும் மனநிலையிலிருந்து மீட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

II. தற்காலிக நெருக்கடிக்குள்ளான மற்றும் பாதிப்புக்கு உள்ளான சமூக குழுக்களுக்கு சொந்தமான பயனாளிகளையும் வலுவூட்டச் செய்து அவர்ளின் பொருளாதார பிரிவினை நிரந்தரமாக ஆக்குதல்.

III. நுண் மற்றும் சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்கள் / விவசாயிகளை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசிய உற்பத்தியினை உயர்த்துவதற்கு நடவடிக்கைளை மேற்கொள்ளல்

IV. உற்பத்திகளின் பொருட்டு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை விஸ்தரித்தல்.

V. வலுவூட்டல் வேலைத்திட்டத்தின் கீழ் நன்மைகளை பெறுகின்ற குடும்பங்களில் உள்ள இளைஞர் / யுவதிகளுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தல்

VI. வறுமை நிலை காரணமாக பொருளாதார அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள பெண்களை வலுவூட்டல் வேலை திட்டங்களில் உள்வாங்கிக் கொண்டு வசதிகளை வழங்கும்போது அவர்களுக்கு முன்னுரிமை வழங்குதல்

VII. தன்னம்பிக்கையுள்ள மக்களை உருவாக்குவதற்கு உளரீதியான பலத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல்

VIII. மாற்றுத்திறனாளிகள், முதியோர் மற்றும் நோய்நிலைகளால் வாடுகின்ற ஆட்களுக்கு உள, சமூக மற்றும் சுகாதாரத் துறைகளில் இருந்து வலுவூட்டல் நடவடிக்கைகளை மேற்கொண்டு திருப்திகரமான ஆட்களாக அவர்களை உருவாக்குதல்.

**03. இலக்குகள்**

**3.1 தேசிய இலக்கு**

2024 ஆம் ஆண்டில் குடும்பங்களை வலிவூட்டச் செய்யும் இலக்கானது, மூன்று இலட்சம் பயனாளி குடும்பங்கள் ஆகும். அஸ்செவும நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறுகின்ற ஒவ்வொரு சமூக குழுக்களும் பிரதிநிதித்துவப்படுகின்ற பிரகாரம் இந்த இலக்குகளை பயனாளிக் குடும்பங்களில் இருந்து தெரிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

3.2 திட்டமிடலுக்கு அமைய 2024 ஆம் ஆண்டில் தெரிவு செய்து கொள்ளப்பட்ட 300,000 குடும்பங்களை பொருளாதார, சமூக மற்றும் உள ரீதியான பிரிவுகளில் இருந்து மூன்று வருட காலத்திற்குள் வலுவூட்டச் செய்வதற்கு தேவையான வேலைத்திட்டங்கள், கருத்திட்டங்களை இனம்கண்டு நடைமுறைப்படுத்தி நிலைபேறான வருமான வழியொன்றினை உருவாக்கிக் கொடுப்பதும், அக்குடும்பங்களை நிவாரணம் பெறும் மனநிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேண்டும்.

3.4. **மாவட்ட, பிரதேச, கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டங்களுக்கு இலக்குகளை தயாரித்து வழங்குதல்.**

I. ஒவ்வொரு மாவட்டம் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகளினால் 2024 ஆம் ஆண்டில் வலுவூட்டப்படவேண்டிய இலக்குக் குடும்பங்களின் எண்ணிக்கையினை கணக்கீடு செய்து 01ம் இலக்க இணைப்புடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தங்களது மாவட்ட / பிரதேச செயலப் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள இலக்கு குடும்பங்களின் எண்ணிக்கையினை இவ்வாண்டிலிருந்து முன்வரும் மூன்று ஆண்டுகளில் வலுவூட்டல் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

II. பிரதேச செயலகப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள குடும்பங்கள் எண்ணிக்கைக்கு குறையாத பிரகாரம் பிரதேச செயலாளரால் பிரிவின் அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் பொருட்டு இலக்குக் குடும்பங்களின் எண்ணிக்கையினை கணக்கீடு செய்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோாகத்தர் ஒருத்தருக்கு வழங்குதல் வேண்டும் அங்கு அனைத்து அஸ்வெசும நலன்புரி நன்மைகள் சமூகக் குழுவொன்றில் பயனாளிக் குடும்பங்கள் உள்ள்டங்குகின்ற பிரகாரம் இலக்கு குழுக்களை கணக்கீடு செய்தல் வேண்டும்.

**04. 2024 ஆம் ஆண்டில் வலுவூட்டல் செய்யும் வேலை திட்டத்தினை ஆரம்பிப்பதும் அதற்கான கட்டங்களும்.**

4.1 இச்சுற்றறிக்கை ஆலோசனைகளை சகல உத்தியோத்தர்களுக்கும் வழங்குவதற்கும் விளக்கமளிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

4.2 பிரதேசசெயலகப் பிரிவு மட்டத்தில், கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் இலக்குகளை தயாரித்து வழங்குதல் வேண்டும்.

4.3 வழங்கப்பட்டுள்ள எடுகோள்களுக்கு அமைய, கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் வலுவூட்டும் பொருட்டு பொருத்தமான பயனாளிகளை தெரிவு செய்வது மற்றும் பட்டியல்களைத் தயாரித்துக் கொள்ளல் வேண்டும்.

4.4 தெரிவு செய்து கொள்ளப்பட்ட பயனாளிகளின் பொருட்டு குடும்ப அபிவிருத்தி திட்டத்தினை தயாரிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள படிவங்கள் இணைப்பு 2(i) மற்றும் இணைப்பு 2(ii) ஐப் பயன்படுத்தி தகவல்களையும் தரவுகளை சேகரித்தல் வேண்டும்.

4.5 அதன் பின்னர் ஒவ்வொரு குடும்பங்களின் பொருட்டும் குடும்ப அபிவிருத்தித் திட்டத்தினை தயாரிக்க வேண்டியதுடன் அது தொடர்பில் எதிர்காலத்தில் விளக்கம் அளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**05. 2024 ஆம் ஆண்டில் வலுவூட்டப்படுகின்ற பயனாளி குடும்பங்களை இனங்காண்பதற்கு கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள்.**

கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள இலக்குக் குடும்பங்களின் எண்ணிக்கையின் பொருட்டு பொருத்தமான பயனாளிகளை இனங்காண்பது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தர்களால் மேற்கொள்ளப்படல் வேண்டும். அங்கு தனது கடமை அதிகார பிரதேசத்தில் உள்ள அஸ்வெசும நலன்புரி பயனாளிகள் இடத்தையே கீழ் குறிப்பிடப்படுகின்ற தகுதிகள் சகலதையும் அல்லது அதிலும் அதிகப்படியானவற்றினை பூர்த்தி செய்து இருக்கின்ற அல்லது பூர்த்தி செய்கின்ற குடும்பங்களை வலுவூட்டுவதற்கு தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

1. அஸ்வெசும நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் நன்மைகளைப் பெறுகின்ற சமூக குழுக்களுக்கு சொந்தமான குடும்பமொன்று அல்லது ஒரு நபராக இருத்தல்.

2. ஏலவே வருமானமீட்டல் கருத்திட்டம் ஒன்றினை நடாத்திச் செல்லும் அல்லது புதிதாக கருத்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு திட்டம் ஒன்றினை / ஆற்றல் ஒன்றினை பயிற்சிகளைக் கொண்டுள்ள நபர் ஒருவர் அல்லது அங்கத்தவர்கள் இருக்கின்ற குடும்பம் ஒன்று.

3. பயிற்சி ஒன்றின் பின்னர் உள்நாட்டு வெளிநாட்டு தொழில்ஒன்றில் அல்லது சுய தொழில் ஒன்றில் ஈடுபடக்கூடிய திருமணமாகாத இளைஞர் யுவதிகள் உள்ள குடும்பம் ஒன்றாக இருத்தல்.

4. பொருளாதார ரீதியான வலுவூட்டலின் ஊடாக மாதாந்தம் ரூபாய் 30,000 அல்லது அதிலும் கூடிய வருமானம் ஒன்றினை உழைக்கின்ற சுய தொழிலில் ஈடுபடும் ஒருவர் விவசாயி ஒருவர் அல்லது அதன் பொருட்டான சாத்திய வளங்கள் உள்ள குடும்பம் ஒன்று அல்லது ஒரு நபர்.

5. சமுர்த்தி வங்கிக் கடனை பெற்றுக் கொள்வதற்கு உத்தேசித்துள்ள பயனாளி ஒருவராக இருப்பின், சமுதாய அடிப்படை அமைப்பில் அல்லது சமுர்த்தி வங்கியில் அங்கத்துவத்தினை உடைய ஒருவராக இருப்பதும் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதியினை கொண்டுள்ள அல்லது பூர்த்தி செய்யக்கூடிய குடும்பம் ஒன்றாக நபர் ஒருவராக இருத்தல்.

**06. வலுவூட்டப்படுகின்ற குடும்பங்களின் பொருட்டு குடும்ப அபிவிருத்தி திட்டமிடலுக்காக தகவல்களை / தரவுகளை சேகரித்தல்.**

மேலே பந்தி இலக்கம் 05 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளின் பிரகாரம் தெரிவு செய்து கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு பயனாளியின் பொருட்டும் குடும்ப அபிவிருத்தித் திட்டமிடலை தயாரிப்பது தொடர்பிலான ஆலோசனைகள் கீழுள்ளவாராகும்.

1. குடும்ப அபிவிருத்தி திட்டமிடலை தயாரிப்பதற்குத் தகவல்களை சேகரிப்பதற்கு இலக்கம் 02(i) மற்றும் இலக்கம் 2(ii) 22 படிவங்களை பயன்படுத்துதல் வேண்டும்.
2. சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரால் தெரிவு செய்யப்பட்ட பயனாளியின் வீட்டுக்கு கருத்திட்டம் செயல்படுத்தப்படும் இடத்திற்கு போய் ஆய்வுகளை மேற்கொள்ளல் மற்றும் கலந்துரையாடல்கள் மூலம் தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

3. சேகரித்த தகவல்கள் / தரவுகளின் பிரகாரம் பயிற்சி, அறிவு, நிதியுதவி, பொருளுதவி, கடன் வசதிகள் ஆலோசனைச்சேவைகள் மற்றும் பிற சேவைகளை வழங்கக்கூடிய பயனாளிகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய அட்டவணையை தயாரித்தல் கொள்ள வேண்டும்.
4. தகவல்களை சேகரிப்பதற்கு தேவையான படிவங்கள் சமுதாய அடிப்படை அமைப்பு / பிரதேச அமைப்பு நிதியத்தில் இருந்து அச்சிட்டு கொண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு வழங்குதல் வேண்டும். செலவினை மேற்கொள்ளும் போது பிரதேச அமைப்பு இணக்கப்பாட்டினை பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் இப் பணிகள் வங்கிச் சங்க முகாமையாளரால் ஒருங்கிணைப்பு செய்யப்பட வேண்டும்.

**07. குடும்பங்களை வலுவூட்டுகின்ற பிரதான துறைகளும் அதற்குரிய வேலை திட்டங்களையும் அறிமுகப்படுத்துதல்.**

துறைகளும் பனிப் பொறுப்புகளும்.

| | |
|---|---|
| 1. உளவியல் ரீதியான வலுவூட்டுதல் - | சிறந்த மனநிலையினை ஏற்படுத்துவதும் உள சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதும் தனிநபர் ஆயுளை அதிகரிப்பதும் சமூக நல்லிணக்க செயற்பாடுகளை விருத்தி செய்வதும், படைப்பாக்க சிந்தனை முறையொன்றினை ஏற்படுத்துவதும் தலைமைத்துவ திறமையினை உருவாக்குவதுடன் சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய ஆற்றல்களை விருத்தி செய்வது போன்ற துறைகளில் அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 2. பொருளாதார ரீதியான வலுவூட்டுதல் - | வாழ்வாதார அபிவிருத்தி, தொழில் முயற்சி அபிவிருத்தி, திறன் அபிவிருத்தி, தொழில் வழிகாட்டல் நிலை போன்ற பிரிவுகளை மேம்படுத்துவதன் ஊடாக பயனாளிகளுக்கு பயனுள்ள பொருளாதார பணி ஒன்றில் ஈடுபடுவதற்கும், நிலைபேறான வருமான வழிகளை உருவாக்கிக் கொடுப்பதும் வருமான மட்டத்தை உயர்த்துவதன் பொருட்டு உதவிபுரிகின்ற திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். |
| 3. சமூக ரீதியான வலுவூட்டுதல் - | ஆட்களின் நடத்தைகளை விருத்தி செய்தல், குடும்ப அலகுளில் உள்ளக பிரச்சனைகளை குறைத்தல், அதேபோல் வீட்டு முகாமைத்துவம் மகிழ்ச்சியான குடும்ப அலகுகளை கட்டியெழுப்புதல் மற்றும் சட்டரீதியான வலுவூட்டல்கள் போன்ற பிரிவுகளை பலப்படுத்த எதிர்ப்பார்க்கப்படுகின்றது. |

**08. ஆசியா அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி நிதி உதவித் திட்டத்தின் கீழ் உத்தேச முன்னோடிக் கருத்துத்திட்டங்களை செயல்படுத்துதல்.**

- வலுவூட்டும் வேலை திட்டங்களை வெற்றிகரமாக்கிக் கொள்ளும் பொருட்டு முன்னோடிக் கருத்திட்டம் ஒன்றினை நடைமுறைப்படுத்துவது பொருத்தமானது என தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் முன்மொழியப்பட்டுள்ளது.
- அதன் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் ஆசிய அவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி நிதி உதவி திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களிலும் 16 ஆயிரம் குடும்பங்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற பிரகாரம் தெரிவு செய்து கொள்ளப்பட்ட பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் கிராமப் பிரிவுகளில் இருந்து முன்னோடிக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.
- இந்த முன்னோடி கருத்து திட்டத்தின் பொருட்டு பொருத்தமான பிரதேசங்களை தெரிவு செய்யும் போது வறுமைச்சுட்டி வீதம் மற்றும் அஸ்வெசும நலன்புரி நன்மைகளை பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை ஆகிய விடயங்கள் அடிப்படையாக கொள்ளப்படுகின்றது.
- இது தொடர்பான மேலதிக விபரங்கள் எதிர்காலத்தில் வெளியிடப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

09. அஸ்வெசும பயனாளிகளை பொருளாதார ரீதியாக வலுவூட்டச் செய்வதன் கீழ் வாழ்வாதார அபிவிருத்தியின் பொருட்டு நிதியுதவிகள் அல்லது பிற வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தேவையான உதவிகளை பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ள முடியும் இதன் பொருட்டு நிதி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் MF/02/2003 என்ற இலக்கமும் 2023/12/29 ஆம் திகதியிடப்பட்ட சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறியத் தருகின்றேன்.

10. வலுவூட்டல் வேலைத் திட்டத்தின் கீழ் பொருளாதார / உள / சமூக வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது கிராமிய / பிரதேச / மாவட்ட மட்டத்தில் நெறிப்படுத்தல் மற்றும் கண்காணிப்புக் குழுக்களை அமைப்பது, தகவல் / முன்னேற்றங்களை பெற்றுக் கொள்வது உட்பட ஏனைய விடயங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் விளக்கமளிக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

11 இந்த வேலை திட்டமானது 2024.03.01ம் திகதியிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதையும் அறியத் தருகின்றேன்.
12. இந்த வேலை திட்டம் தொடர்பில் மேலும் விடயங்களை அறிந்து கொள்வதற்காக திட்டமிடல் மற்றும் நெறிப்படுத்தல் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்க, மின்னஞ்சல் முகவரி ஊடாக மேற்கொள்ளுமாறு தொடர்பு கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம் - 0112889000,**
**மின்னஞ்சல் முகவரி - dirpm123@gmail.com.**

13. மூன்று தசாப்த காலங்கள் பூராவும் சமுர்த்தி பயனாளிகள் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோரின் வறுமை நிலையினை குறைப்பது தொடர்பில் பல்வேறுபட்ட வேலை திட்டங்கள் மற்றும் கருத்துத்திட்டங்களை நடைமுறைப்படுத்தியதன் ஊடாக தாங்கள் பெற்றுக்கொண்ட அனுபவம் திறமை மற்றும் அறிவை இந்த வேலைத்திட்டத்தில் அர்ப்பணிப்பீர்கள் என எதிர்பார்க்கின்றேன். மேலும் இப்பணியை முன்னுரிமை அடிப்படையில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை வெற்றி கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறியத் தருகின்றேன்.

**இந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாக ஆக்கிக் கொள்வதற்கு தாங்கள் உட்பட அனைவரும் வழங்கிய ஒத்துழைப்பினை போற்றி மதிக்கின்றேன்.**

**சீ.டி.களுஆரச்சி**
**பணிப்பாளர் தலைமையதிபதி.**

**பிரதிகள்.**

01. ஜனாதிபதி செயலாளர், ஜனாதிபதி செயலகம், கொழும்பு - த.கூ.க பொருட்டு
02. செயலாளர், மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு - த.கூ.க பொருட்டு
03. பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம் - த.கூ.க பொருட்டு
04. பணிப்பாளர் நாயகம், தேசிய பாதீட்டுத் திணைக்களம் - த.கூ.க பொருட்டு
05. கணக்காய்வாளர் தலைமையதிபதி, தேசிய கணக்காய்வுப் பணிமனை - த.கூ.க பொருட்டு
06. மேலதிக பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தி திணைககளம் - த.கூ.க பொருட்டு
07. பிரதம கணக்காளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க பொருட்டு
08. பணிப்பாளர், உளவளத்துணை பிரிவு, மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சு-- - த.கூ.க பொருட்டு
09. பணிப்பாளர், நாயகம் அபிவிருத்தி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் - த.கூ.க பொருட்டு
10. பணிப்பாளர் நாயகம், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் - த.கூ.க பொருட்டு
11. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
12. சகல பிரிவுத் தலைவர்கள் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - உ.ந. பொருட்டு
13. சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சங்க முகாமையாளர்கள் - அ.கொ.பொருட்டு மற்றும் உ.ந. பொருட்டும்
14. சகல சமுர்த்தி சமுதாய சமுதாய வங்கி முகாமையாளர்கள் - அ.கொ.பொருட்டு மற்றும் உ.ந. பொருட்டும்
15. கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில்கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்- அ.கொ.பொருட்டு - அ.கொ.பொருட்டு மற்றும் உ.ந. பொருட்டும்
16. சகல பிரதேச அமைப்புக்களின் தலைவர்கள் - அ.கொ.பொருட்டு மற்றும் உ.ந. பொருட்டும்
17. சகல சமுதாய அடிப்படை அமைப்புகளின் தலைவர்கள் - அ.கொ.பொருட்டு மற்றும் உ.ந. பொருட்டும்